*15 ஜூன் 2015*

ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், " உன்னை ஓர் ஆத்மாவாக, ஓர் ஒளிப்புள்ளியாக கருது. ஆத்மாக்களுடைய தந்தை நிராகாரமானவர். அவர் முழுமையான ஞானம் நிறைந்தவர். அவர் இங்கே வந்து நமக்கு கற்பிக்கின்றார். அவர் நமக்கு உலகத்தினுடைய ஆரம்பம், மத்திமம் மற்றும் இறுதியின் இரகசியங்களை விளக்குகிறார். வெகு சிலரே "ஆத்மாவாகிய நான் ஓர் ஒளிபுள்ளி எனவும் தந்தையும் ஒளிப்புள்ளியாவார்" எனவும் தெரிந்துகொண்டு நினைவில் இருக்கின்றனர். ஒவ்வொரு சிறு ஆத்மாவிலும் 84 பிறவிகளின் பாகம் பதிவாகியுள்ளது.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் ஒரு ஆத்மா எனவும் நீங்கள் மட்டுமே தூய்மையாகுபவர், ஞானக்கடல் என்ற விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்துக் கொள்கின்றேன். "ஆத்மாவாகிய நான் ஓர் ஒளிபுள்ளி எனவும் அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாக இருக்கும் நீங்களும் ஒளிப்புள்ளியானவர்" என்ற ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். அவ்வளவு ஒரு சிறிய ஆத்மாவாகிய எனக்குள் 84 பிறவிகளின் பாகத்தை நான் கொண்டிருக்கின்றேன்.

சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு : உங்களுக்கு பழைய உலகம் இப்போது அழிய இருக்கின்றது எனவும், அதன்பிறகு நீங்கள் சத்யுகம் சென்று உங்களுடைய பாகங்களை நடிக்க வேண்டும் என்றும் தெரிகின்றது. சொர்கத்தின் சத்யுக வாசிகள் ஆகி விடுவீர்கள். இதை நினைவு செய்வதனால், நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நாம் சொர்க்கவாசிகள் ஆகுவதற்கு படித்துகொண்டிருக்கின்றோம். இந்த படிப்பு முடியும் வரை, உங்கள் சந்தோஷம் நிலையாக இருக்க வேண்டும்.

என்னுடைய மனோபாவத்தை நான் இஸ்தூலத்திலிருந்து ஆன்மீகமாக மாற்றுவதில் உறுதியாக இருக்கிறேன். நான் தங்கயுக வாசியாக ஆகுவதற்கு படித்துக்கொண்டிருக்கின்றேன் என்று நினைவு செய்கின்றேன். நான் நாள் முழுவதும் ஒரு நிலையான ஆன்மீக மனப்பான்மையை தக்கவைத்துக்கொள்கின்றேன்.

திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு : குழந்தைகளாகிய உங்களுக்கு முக்தி மற்றும் ஜீவன் முக்தி ஆகிய இரண்டு தூய உலகங்கள் இருக்கின்றன என்று தெரியும். ஒவ்வொரு ஆத்மாவும் தூய்மையாகி முக்தி தாமத்திற்கு சென்றுவிடும்.

நான் ஆத்ம உலகை ஒரு கண்ணிலும் சத்யுகத்தை மற்றறொரு கண்ணிலும் வைத்திருக்கின்றேன். இன்று என்னுடைய திருஷ்டியில், ஒவ்வொரு ஆத்மாவும் தூய்மையாகி ஆத்ம உலகிற்கு செல்கின்ற காட்சியை தக்கவைத்துகொள்கின்றேன் .

*ஒரு அலையை உருவாக்குதல்*

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையை செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம் முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*